# பழைய ஓய்வூதியத் திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு முதல் பக்கத் தொடர்ச்சி

● அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமண முன்பணம் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

● அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், அதிகமாக, தமிழ்நாட்டில் பணி புரியும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வீடு கட்டுவதற்கான முன்பணம் 40 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

● ஒழுங்கு நடவடிக்கைகளால் பணியி லிருந்து ஓய்வு பெறும் நாளன்று தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்படும் சூழ்நிலையை அகற்றி, அரசுப் பணியாளர்களை ஓய்வு பெற அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

● ஓய்வூதியப் பணிக்கொடை ரூபாய் 20 இலட்சத்திலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

● ஓய்வூதியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டு உதவி 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அவர்களுக்கான பொங்கல் பரிசுத் தொகை ரூபாய் ஐநூறிலிருந்து ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

● பெண் அரசு அலுவலர்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, மகப்பேறு விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனில் முழுமையான அக்கறை யுடன் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசின் சார்பில், பல்வேறு கோரிக்கைகள் பல்லாயிரம் கோடி ரூபாய்ச் செலவில் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் நாளன்று எவ்வளவு ஓய்வூதியம் பெறுவோம் என்று அறியாமல் ஓய்வு பெறும் நிலை கடந்த இருபது ஆண்டுகளாக இருப்பதாகவும், இதனை அகற்றி பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்கள் தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன.

அவர்களின் இந்த நீண்டகாலக் கோரிக்கைகள் என்பது ஒவ்வொரு அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர் குடும்பத்தினரின் வாழ்க்கையுடனும் அவர்களின் எதிர்காலத்துடனும் தொடர்புடையது என்பதை உணர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, இவற்றின் மீது முழுக்கவனம் செலுத்தியதுடன், இக்கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அரசு அலுவலர்களுக்கு முறையான ஓய்வூதியத்தை வழங்குவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை வழங்கிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப்சிங் பேடி அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையையும் பெற்றுள்ளது.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் காப்பதில் உண்மையான அக்கறை கொண்ட இந்த அரசு, அந்த அறிக்கையை முழுமையாக ஆராய்ந்து, தமிழ்நாடு அரசு தற்போது சந்தித்து வரும் நிதிச் சூழலில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவு செய்வதற்கான வழிமுறைகள் குறித்து நிதியமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களிடம் முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். அந்த ஆலோசனையின் போது, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், நிதித்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ஆகியோரிடம் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அளித்த முக்கியக் கோரிக்கைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

அரசு அலுவலர்களின் நலன் மற்றும் எதிர்பார்ப்புகள், மாநிலத்தின் நிதிநிலை, எதிர்காலத்தில் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு எவ்விதத் தடைகளுமின்றி முறையாக ஊதியமும், ஓய்வூதியமும் கிடைக்கச் செய்யவேண்டிய பொறுப்பு போன்ற பல அம்சங்களை சீர்தூக்கிப் பார்த்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கிடைத்து வந்த ஓய்வூதியம் மற்றும் பல்வேறு பலன்களைத் தொடர்ந்து அளிக்கக்கூடிய புதிய திட்டமாக "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)" என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதல மைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தப் புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்:

**1. மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்கு வதற்கு, பணியாளர்களின் 10 சதவீதப் பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.**

**2. 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுதோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.**

**3. ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.**

**4. அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.**

**5.புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டபின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.**

**6. பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ் பணியில் சேர்ந்து, புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியம் இன்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும்.**

மேற்கூறிய TAPS திட்டத்தை அறிமுகப்படுத்துவதால், ஓய்வூதிய நிதியத்திற்கு கூடுதலாக தமிழ்நாடு அரசு 13 ஆயிரம் கோடி ரூபாய் அளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் அரசின் பங்களிப்பாக வழங்க வேண்டும். இந்தப் பங்களிப்புத் தொகை பணியாளர்களின் ஊதியத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் மேலும் உயரும்.

தற்போது தமிழ்நாடு அரசு சந்தித்து வரும் கடுமையான நிதிச்சூழலிலும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காத்திடும் பொருட்டு, மேற்கூறிய செலவினங்களை தமிழ்நாடு அரசே முழுமையாக ஏற்றிடும்.

### ஒருமனதாக வரவேற்று முழு ஒத்துழைப்பை நல்கிடுவீர்!

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனையும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடனும் நடைமுறைச் சாத்தியங்களுடனும் கூடிய வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபது ஆண்டு காலக் கோரிக்கையை நிறைவேற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத் திற்கு இணையான ஓய்வூதியத்தையும், பணப் பயன்களையும் பெற வழிவகுக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த TAPS திட்டத்தினை, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருமனதாக வரவேற்று, அதனைச் செயல்படுத்துவதற்கான முழு ஒத்துழைப்பையும் நல்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### மொழிப்போர்த் தளபதி —

# கழகத் தளகர்த்தர் எல்.கணேசன் மறைவு!

## அமைச்சர்கள் — கழக முன்னணியினர் அஞ்சலி!

**தஞ்சாவூர் ஜன..5.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர்களில் ஒருவரான கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், மொழிப்போர்த் தியாகியுமான எல்.கணேசன் (வயது 92) அவர்கள் நேற்று (04.01.2026 ஞாயிறு) காலை 5.30 மணியளவில் உடல்நலக்குறைவு காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**



மறைந்த எல்.கணேசன் அவர்கள் கடந்த 1963 ஆம் ஆண்டு முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முழுவீச்சில் பங்கேற்றவர். 1967, 1971, 1989 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் தி.மு.க. சார்பில் ஒரத்தநாடு தொகுதியில் போட்டியிட்டு வென்றவர். தவிர, 1982 86ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தார். தமிழக சட்டமேலவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார்.

### 4 அவைகளிலும் பொறுப்பு வகித்தவர்!

1986ல் சட்ட மேலவைத் தேர்தலில் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுதியிலும், 2004 மக்களவைத் தேர்தலில் திருச்சி தொகுதியிலும் போட்டியிட்டும் அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றவர். இந்திய நாடாளுமன்ற மேலவை, கீழவை மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, கீழவை ஆகிய வரலாற்று சிறப்பு மிக்க நான்கு அவைகளிலும் பொறுப்பு வகித்த பெருமை அவருக்கு உண்டு.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர், கழக அறிவிக்கும் போராட்டம், ஆர்ப்பாட்டம், மாநாடு என எதுவாக இருப்பினும் வயது முதிர்ந்த நிலையிலும் முதல் ஆளாக நிற்பார். கழக தேர்தல் பணிக்குழு தலைவராகவும் சிறப்பாக பணியாற்றியவர்.

மறைந்த எல்.ஜி. அவர்களுக்கு க.கமலா என்ற மனைவியும், தஞ்சை மத்திய மாவட்டக் கழகப் பொருளாளர் எல்.ஜி. அண்ணா, மருத்துவர் குட்டி (எ) எல்.ஜி.கோவிந்தநாதன், ஆகிய இரு மகன்களும், மருத்துவர் எல்.ஜி.மாதவி என்ற மகளும் உள்ளனர்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த அமைச்சர்கள் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் முனைவர் கோவி.செழியன், எஸ்.இரகுபதி, தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தஞ்சை மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழறிஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் (ஐ.ஏ.எஸ்.ஓய்வு) அவர்கள் குடும்பத்தினருடன் சென்று அன்னாரின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (5.1.2026) காலை 09.00 மணியளவில் அவரது இல்லமான தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி சாலை, பாலாஜி நகரில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு ஒரத்தநாடு ஒன்றியம் அவரது சொந்த ஊரான கண்ணந்தங்குடி கீழையூரில் காலை 11.00 மணியளவில் அடக்கம் செய்யப்படுகிறது.

---

### புதுக்கோட்டை மாவட்ட

# அறங்காவலர் குழுத் தலைவராக இரண்டாவது முறையாக தவ.பாஞ்சாலன் பொறுப்பேற்பு!

## அமைச்சர் எஸ்.ரகுபதி — கே.கே.செல்லப்பாண்டியன் வாழ்த்து!

புதுக்கோட்டை, ஜன. 5-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் கறம்பக்குடி திமுக தெற்கு ஒன்றிய கழக செயலாளருமான தவ.பாஞ்சாலன் புதுக்கோட்டையில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக 2 வது முறையாக மீண்டும் பதவி ஏற்று கொண்டார்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில் அமைச்சர், தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா எம்.எல்.ஏ., எம்.எம். அப்துல்லா, கவிச்சுடர். கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், பரணி கார்த்திகேயன், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஷ், சுப.சரவணன், சு.சண்முகம் , எம்.எம்.பாலு மற்றும் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---



கழகத் தலைவர் முதலமைச்சர் தலைவர் – தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் சிறப்பான செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியை சார்ந்த மாற்றுக் கட்சி தோழர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கழக இருவண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்வில் ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள், அரியலூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அன்பரசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

---

### கழகத் தளகர்த்தர் எல்.கணேசன் மறைவு:

# என் உள்ளம் வேதனையால் துடிக்கிறது!

## முதல்வர் — கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு இரங்கல்!

**சென்னை, ஜன. 5-**

**"கழகத் தளகர்த்தர் எல்.கணேசன் அவர்கள் மறைவால் என் உள்ளம் வேதனையால் துடிக்கிறது" என்று அன்னாரின் மறைவு குறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி மொழிப்போர்க் களத்தில், இந்திமொழியின் ஆதிக்கத்திற்கு எதிராகப் புறப்பட்ட மாணவர் படையின் தளகர்த்தர்களில் ஒருவரும் கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினருமான எல். கணேசன் அவர்கள் மறைந்த செய்தியால் பெரிதும் துயருற்றேன்.



சட்டமன்றம் சட்டமேலவை நாடாளுமன்றம் என முழங்கிய அவரை இனி நாம் காண முடியாது என்பதை எண்ணும்போதே உள்ளம் வேதனையால் துடிக்கிறது. தலைவர் கலைஞர் அவர்களின் பாசத்தைப் பெற்ற 'எல்.ஜி.' அவர்கள், 1989இல் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, அவரது பாராளு மன்றச் செயலாளராகவும் இருந்தார்.

நான் தஞ்சை மாவட்டத்திற்குச் செல்லும்போதெல்லாம் தவறாது அவரது இல்லத்திற்குச் செல்வேன்; அவரும் புன்சிரிப்புடன் வரவேற்று, நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் மக்களிடம் பெற்றுள்ள வரவேற்பு குறித்து மகிழ்ச்சி பொங்கப் பெருமை யோடு சொல்வார்.

திராவிட இயக்கக் கொள்கைகள் மீது பற்றுகொண்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்று அரசியல் களத்தில் பணியாற்றிய அவர் என்றும் நம் நெஞ்சங்களில் நிறைந்திருப்பார். அவரது பிரிவால் வாடும் கழக உடன்பிறப்புகள், குடும்பத்தினர், நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.